**அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம்**

**தேசிய மட்டத்திலான "அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2021"**

**திருக்குறள் மனனம், ஒப்பித்தல் போட்டி - பிறந்தஆண்டு 2011(வளர்நிலை 4)**

தெரிவுப்போட்டி: வளாகத்தில் அன்னைத் தமிழ்முற்ற இறுதிப்போட்டி: 27.03.2021 28.03.2021

---

1. **தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**

   **கற்றனைத்து ஊறும் அறிவு. (396)**

   *ஆற்று மணற்பரப்பில் கேணியானது தோண்டிய அளவிலேயே ஊறும். அதுபோல மக்களுக்குக் கற்ற அளவிலேயே அறிவு வளரும்.*

2. **தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்துஒன்றும்**

   **துன்னற்க தீவினைப் பால்.(209)**

   *ஒருவன் தன்னுயிர் வாழ்க்கையை விரும்புவானயின் தீவினையைக்*

   *கொஞ்சம் கூடப் பிறரிடம் செய்யககூடாது.*

3. **உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே**

   **இடுக்கண் களைவதாம் நட்பு.(788)**

   *உடை நெகிழும்போது நம்மையறியாமல் நமது கைகள் சரிசெய்ய விரைவது போன்று, நண்பர்களுக்குத் துன்பம் வந்தால், உடனே அவர்கள் கூறாமல் உதவி செய்வதே நட்பின் சிறப்பாகும்*

4. **அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**

   **என்உடைய ரேனும் இலர்.(430)**

   *அறிவுடையாரிடம் வேறுறொன்றும் இல்லாவிட்டாலும் அவர்கள் எல்லாமே உடையவர்கள்தாம். அறிவில்லாதவர்களிடம் எல்லாமே நிறைந்திருந்தும் அவர்கள் ஒன்றும் உடையவர் அல்லர்.*

5. **ஆங்கஅமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே**

   **வேந்துஅமைவு இல்லாத நாடு.(740)**

   *ஒரு நாடு, குறிப்பிட்ட சிறப்புகள் எல்லாம் அமைந்து நிறைவு எய்தினாலும்,*

   *நல்ல வேந்தன் அமையாவிடில் அது பயனற்ற நாடாகப் போய்விடும்.*